தேசிய விளையாட்டு நிதியம்

பணிக்கூற்று

இலங்கையில் விளையாட்டுக்களுக்கு ஊக்கமளித்தல், அவற்றினை முன்னேற்றுதல் மற்றும் அபிவிருத்தி செய்வதன் பொருட்டு உதவி மற்றும் ஒத்துழைப்பு வழங்கள் தேசிய விளையாட்டு நிதியத்தின் பணிகளாகும்.

நோக்கு

விளையாட்டு வீர வீராங்கனைகளின் இயலுமைகளை விருத்தி செய்தல்

சட்டப் பின்னணி

தேசிய அரச பேரவையின் 1973 இலக்கம் 25 உடைய விளையாட்டுக்கள் சட்டத்தினால் தேசிய விளையாட்டு நிதியம் தாபிக்கப்பட்டது. சட்டத்தின் பிரகாரம் நிதியத்தின் பணிகள் தொடர்பாக அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெறக்கூடிய நிதி, வெளிநாடொன்றிலிருந்து கிடைக்கப்பெறும் உதவி நிதி, யாதேனும் விளையாட்டு அல்லது விளையாட்டு விழாவின் பொருட்டு அனுசரணையினை வழங்குதலின் பொருட்டு யாதேனும் நிறுவனத்திடமிருந்து கிடைக்கப்பெறும் நிதி, யாரேனும் நபர் ஒருவரிடமிருந்து நன்கொடையாக கிடைக்கப்பெறும் நிதி, வேறு வழிகளால் கிடைக்கப்பபெறும் நிதி இந்நிதியத்திற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும். அமைச்சரினால் நிச்சயிக்கப்படக் கூடிய நிதியளவுகள் இலங்கையில் யாதேனும் விளையாட்டொன்றிற்கு ஊக்கமளித்தல், முன்னேற்றுதல் மற்றும் அபிவிருத்தி செய்தலின் பொருட்டும் விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு கருணை அடிப்படையிலான கொடுப்பனவுகளாகவும், முதலீடு செய்வதன் பொருட்டும் இச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதற்கு அல்லது வலுப்படுத்தும் பணிகளின் பொருட்டும் நிதியத்தினால் நிதியினை செலுத்த முடியும்.

2017 ஆம் வருடத்திற்கான வருடாந்த நிர்வாக அறிக்கை

2017 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடம் தொடர்பாக தேசிய விளையாட்டு நிதியத்தின் வருடாந்த அறிக்கையினை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன

சட்டப் பின்னணி

தேசிய அரச பேரவையின் 1973 இலக்கம் 25 உடைய விளையாட்டுக்கள் சட்டத்தின் இலக்கம் 22 தொடக்கம் 27 வரையுள்ள ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப தாபிக்கப்பட்ட தேசிய விளையாட்டு நிதியம் 2007 ஆம் ஆண்டிலிருந்து விளையாட்டு அமைச்சின் பூரணமான மேற்பார்வையின் கீழ் தொழிற்பட்டது. வருடாந்தம் விளையாட்டு வீர வீராங்கனைகளின் போசணை நிலைமையினை மேம்படுத்துதல் மற்றும் விளையாட்டு இயலுமைகளை உயர்த்துவனை நோக்காகக் கொண்டு நிதியத்தின் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

தேசிய விளையாட்டு நிதியத்தின் கடமைப் பொறுப்புக்கள்

விளையாட்டு அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய விளையாட்டு நிதியத்தின் வாயிலாக இலங்கையின் விளையாட்டினது அபிவிருத்தியின் பொருட்டு விளையாட்டுடன் தொடர்புடைய மனித வளங்களான விளையாட்டு வீர வீராங்கனைகள், பயிற்றுவிப்பாளர்கள் அவ்வாறே விளையாட்டுத்துறையின் பௌதீக மற்றும் வேறு உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியின் பொருட்டு காணப்படும் நிதி ஏற்பாட்டின் கீழ் நிதியானது வழங்கப்படுதல் நிகழ்த்தப்படுகின்றது.

தற்காலத்தில் விளையாட்டு நிதியத்தின் வாயிலாக மேலே குறிப்பிட்ட பணிகள் தொடர்பாக காலத்திற்குப் பொருந்தும் விதமாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதாவது சர்வதேசப் போட்டி வெற்றிகளின் பொருட்டு விளையாட்டு வீர வீராங்கனைகள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள நியதிகளின் கீழ் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல், இனங்காணப்பட்டுள்ள நியதிகளின் கீழ் மாதாந்தம் வீரர்களின் பொருட்டு நிகழ்த்தப்படும் போசணைக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல், விளையாட்டின் அபிவிருத்தியின் பொருட்டு பரிந்துரைக்கப்பட்ட விஷேட வேண்டுகோள்கள் தொடர்பாக வழங்கப்படும் கொடுப்பனவுகள், தேசிய விளையாட்டுப் பெருவிழாவின் பொருட்டு அனுசரணையினை வழங்குதல், தேசிய மற்றும் சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள், விஷேடத்துவமுடைய விளையாட்டு விழாக்களின் பொருட்டு மேற்கொள்ளப்படும் பரிசு வழங்குதல்கள், விஷேட அளிப்புக்கள் (அதாவது பல்கலைக்கழகங்கள் மற்றும் வேறு நிறுவனங்கள் தொடர்பாக நிகழ்த்தப்படும் விளையாட்டு விழாக்களின் பொருட்டான கொடுப்பனவுகள், விளையாட்டு வீரர்கள் ஓய்வுபெற்றுச் செல்லும் போது / விளையாட்டிலிருந்து விடைபெறும்போது மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள், விஷேடத்துவமடைய விளையாட்டு உபகரணங்களின் வேண்டுகோள்களுக்கு அனுசரணையினை வழங்குதல், தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகள் தொடர்பாக பல்வேறுபட்ட அணிகளின் பொருட்டு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள், கருணை அடிப்படையிலான காரணங்களின் மீது விளையாட்டுடன் தொடர்புடைய நபர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் விளையாட்டு அபிவிருத்தியினது எதிர்பார்ப்புடன் மேற்கொள்ளப்படும் வேறு கொடுப்பனவுகள் என்பனவாகும்).

விளையாட்டுச் சம்மேளனங்களுக்கு வழங்கப்பட்ட நிதி

பல்வகைப்பட்ட விளையாட்டு நிகழ்ச்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் விளையாட்டுச் சம்மேளனங்களுக்கு நிதி ஒதுக்கீடுகளை விடுவிப்பதற்காக செயற்படுவதன் வாயிலாக 2017 ஆம் வருடத்தினுள் தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் பலவற்றிற்கு விளையாட்டு வீர வீராங்கனைகள் பங்குபற்றச் செய்யப்பட்டனர். விளையாட்டுச் சம்மேளனங்களின் வேண்டுகொள்களைக் கருத்திற்கொண்டு நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட நிதியளவுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

தொடர் இலக்கம்	விளையாட்டுச் சம்மேளனங்கள்	கொடுப்பனவு செய்யப்பட்ட நிதி (ரூ.)
1.	மாத்தறை மாவட்ட மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் சங்கம்	200,000.00
2.	இலங்கை ஜிம்நாஸ்டிக் சங்கம்	504,000.00
3.	விளையாட்டுக் கழகங்கள்	381,500.00
	மொத்தம்	**1,085,500.00**

விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு நிதி உதவி வழங்கள்

தொடர் இலக்கம்	விடயம்	கொடுப்பனவு செய்யப்பட்ட நிதி (ரூ.)
1.	விளையாட்டு வீரர்கள் தொடர்பாக போசணைக் கொடுப்பனவு (தற்போது விளையாட்டில் ஈடுபட்டுள்ள)	20,100,000.00
2.	விளையாட்டுப் பொருட்கள் மற்றும் ஏனைய வழங்கள்கள்	733,311.40
3.	விளையாட்டு வீரர்கள் தொடர்பாக மருத்துவ உதவிகள்	1,050,000.00
	மொத்தம்	**21,883,311.40**

பயிற்றுவிப்பாளர்களுக்கு மருத்துவர்களுக்கு மற்றும் உத்தியோகத்தர்களுக்கு நிதி உதவி வமங்கள்

விளையாட்டின் மேம்பாடு தொடர்பாக விளையாட்டு வீர வீராங்கனைகளது பங்களிப்பும் அவ்வாறே பயிற்றுவிப்பாளர்களின் மற்றும் உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பு அவசியத்தன்மை என்பனவற்றை இனங்கண்டு அத் தரப்பினர் தொடர்பாக நிதியுதவியினைப் பெற்றுக்கொடுப்பதற்கு தேசிய விளையாட்டு நிதியத்தின் வளங்கள் பயன்படுத்தப்பட்டன. அதன் பிரகாரம் பயிற்றுவிப்பாளர்களுக்கு மருத்துவர்களுக்கு மற்றும் உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவுகளாக நிதி உதவியும் வெளிநாட்டு பயணத்தின் பொருட்டு விமானப் பயணச்சீட்டுக்கள் உள்ளடங்களான நிதியுதவி வழங்களும் மேற்கொள்ளப்பட்டன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

தொடர் இலக்கம்	விடயம்	கொடுப்பனவு செய்யப்பட்ட நிதி (ரூ.)
1	அறிக்கையிடுவோரின் வெளிநாட்டுச் சுற்றுலா	83,500.00
2	உத்தியோகத்தர்களின் வெளிநாட்டுச் சுற்றுலா	1,952,230.81
	மொத்தம்	**1,992,144.78**

விளையாட்டுப் போட்டிகள் தொடர்பாக நிதி உதவி வழங்கள்

2017 ஆம் வருடத்தினுள் இலங்கையினுள் நடாத்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள் தொடர்பாகவான தேசிய விளையாட்டு நிதியத்தின் பங்களிப்பானது கீழே தரப்பட்டுள்ளது.

தொடர் இலக்கம்	விடயம்	கொடுப்பனவு செய்யப்பட்ட நிதி (ரூ.)
1.	தேசிய விளையாட்டுப் பெருவிழா	8,796,050.00
2.	சர்வதேசப் போட்டிகள்	32,500.00
	மொத்தம்	**8,828,550.00**

வரவேற்பும் உபசரணையும்

தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளின் போது விசேட திறமைகளை வெளிக்காட்டி நாட்டிற்குப் புகழினை ஈட்டித் தந்து தற்போது ஓய்வு நலத்திலுள்ள மற்றும் தற்போதும் விளையாட்டில் செயலாற்றுகையுடன் திகழும் விளையாட்டு வீர வீராங்கனைகள் தொடர்பாக உபகாரமளித்தல் மற்றும் அதியுயர் வெற்றிகளை ஈட்டி தாய்நாட்டிற்கு வருகை தரும்போது கௌரவமிக்க வரவேற்பு ஒன்றினை அளிப்பதன் பெருட்டும் பல நடவடிக்கைகள் 2017 ஆம் வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்டன. அது தொடர்பாக வழங்கப்பட்ட நிதி மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

தொடர் இலக்கம்	விடயம்	கொடுப்பனவு செய்யப்பட்ட நிதி (ரூ.)
1	விளையாட்டு வீர வீராங்கனைகள் தொடர்பான உபகாரங்கள்	24,215,500.00
	மொத்தம்	**24,215,500.00**

வேறு செலவினங்கள்

2017 ஆம் வருடத்தினுள் தேசிய விளையாட்டு நிதியத்திலிருந்து கௌரவ விளையாட்டு அமைச்சர் அவர்களது அங்கீகாரத்திற்கமைய மேற்கொள்ளப்பட்ட வேறு செலவினங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

தொடர் இலக்கம்	விடயம்	கொடுப்பனவு செய்யப்பட்ட நிதி (ரூ.)
1	பல்வகைப்பட்ட செலவினங்கள்	8,122,633.00
2	நிர்வாகச் செலவினங்கள்	657,677.00
3	தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கு தொடர்பான செலவினங்கள்	3,484,761.09
4	வேறு கொடுப்பனவுகள்	600,000.00
	மொத்தம்	**12,865,071.09**

2017 ஆம் வருடத்தினுள் இலங்கை விளையாட்டு வீர வீராங்கனைகளின் ஆற்றுகைகள்

இலங்கை விளையாட்டு வீர வீராங்கனைகள் சர்வதேசப் போட்டிகளின் போது பெற்றுக்கொண்ட பதக்கங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மேற்படி ஆற்றுகைகளை வெளிப்படுத்துவதற்காக தேசிய விளையாட்டு நிதியத்தினால் விசேட பங்பங்களிப்புக்களை வழங்குவதற்கு இயன்றது.

தொடர் இல.	விளையாட்டு	போட்டித் தொடர்	இடம்பெற்ற நாடு	பதக்கம்			மொத்தம்
				தங்கம்	வெள்ளி	வெண்கலம்	
1	100 மீற்றர்	புரூணை திறந்த மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டித் தொடர்	புரூணை	1	–	1	2
2	200 மீற்றர்			1	–	–	1
3	400 மீற்றர் சட்டவேலி ஓட்டம்			1	–	–	1
4	800 மீற்றர்			1	–	–	1
5	நீளம் பாய்தல்			1	–	–	1
6	கபடி	சர்வதேச கடற்கரை கபடிப் போட்டித் தொடர்	முருசி	1	–	–	1
7	50 மீற்றர் பிறீ ஸ்ரைல் நீச்சல்	06 ஆவது இளையோருக்கான பொதுநலவாய நாடுகள் போட்டித் தொடர்	பஹாமாஸ்	–	1	–	1
8	100 மீற்றர் பிறீ ஸ்ரைல் நீச்சல			–	1	–	1
9	கராத்தே	04 ஆவது தெற்காசிய கராத்தே வீரமுதன்மைப் போட்டிகள்	இலங்கை	21	33	8	62

10	ஈட்டி எறிதல்	உலக பரா மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டித் தொடர்	லண்டன்	_	1	_	1
11	800 மீற்றர்	05 ஆவது ஆசிய மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டித் தொடர்	டர்க்மெனிஸ்தான்	1	1	_	2
12	உயரம் பாய்தல்			_	_	1	1
13	நீளம் பாய்தல்			_	1	_	1
14	தேகக் கட்டமைப்பு விருத்தி	51 ஆவது ஆசிய தேகக் கட்டமைப்பு விருத்திப் போட்டித் தொடர்	கொரியா	1	_	_	1
15	பாரந்தூக்கல்	பொதுநலவாய நாடுகள் பாரந்தூக்கல் போட்டித் தொடர்	அவுஸ்திரேலியா	_	1	1	2
	மொத்தம்			**29**	**39**	**11**	**79**

நன்றி நவிலல்

தேசிய விளையாட்டு நிதியத்தின் பணிகளை முன்னெடுத்துச் செல்லும்போது கௌரவ அமைச்சர் அவர்களின், விளையாட்டு அமைச்சின் உத்தியோகத்தர்களது மற்றும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களது பங்குபற்றுதலினை மிக மேன்மையானதாகக் கருதுகின்றேன்.

டப்லிவ்.ஏ. சூலாநந்த பெரேரா
செயலாளர்
மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

தேசிய விளையாட்டு நிதியம்

2017-12-31 ஆம் திகதி நிறைவுற்ற வருடம் தொடர்பாக கிடைப்பனவு கொடுப்பனவுக் கணக்கு

2016 கிடைப்பனவு	கோட் இல. 1	கோட் இல. 2	கோட் இல. 3	கணக்கின் பெயர் மற்றும் விபரம்	கணக்குக் குறிப்பு	கிடைப்பனவு 2017	கிடைப்பனவு 2017
ரூ. சதம்						ரூ. சதம்	ரூ. சதம்
6,114,474.86				சனவரி 01 ஆம் திகதியன்று நிலுவை			**11,860,219.49**
63,312,569.40	**011**	**000**	**00**	நிலையான வைப்புக்களை மீள எடுத்தல்		**5,000,000.00**	
1,861,586.31	**020**	**000**	**00**	நிலையான வைப்புகளுக்கான வட்டி		**2,405,730.40**	
49,000,000.00	**041**	**000**	**00**	வருமானம் – தேசிய லொத்தர் சபை		**29,000,000.00**	
	042	**002**	**00**	பல்வேறுபட்ட கிடைப்பனவுகள் - பலம் விருத்தி மண்டபத்தின் கிடைப்பனவு			
10,000,000.00	**001**	**000**	**00**	நன்கொடைகள்		**19,500,000.00**	
75,000.00	**060**	**000**	**00**	பல்வகைப்பட்ட வைப்புக்கள்	**08**	**5,458,334.00**	
	064	**000**	**00**	செலவினத் தலைப்புக்களுக்கான வரவு		**19,712.00**	
364,600.00	**066**	**001**	**00**	கொடுப்பனவுகள் மீளக் கிடைக்கப்பெறல்	**01**	**185,186.50**	
52,330.14				**WHT** கிடைப்பனவு			
	065	**000**	**00**	தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கு		**4,975,885.22**	
	066	**000**	**000**	வேறு வருமானங்கள்		**1.00**	
							66,544,849.12
130,780,560.71				**கிடைப்பனவு மொத்தம்**			**78,405,068.61**

2016 கொடுப்பனவு						2017 கொடுப்பனவு	2017 கொடுப்பனவு
429,926.03	021	000	00	சர்வதேசப் போட்டிகள்		32,500.00	
360,000.00	026	000	00	நிர்வாகச் செலவினங்கள்		657,677.00	
600,000.00	027	002	00	வேறு கொடுப்பனவுகள்		600,000.00	
370,700.00	028	000	00	விளையாட்டுப் பொருட்கள் மற்றும் ஏனைய வழங்கல்கள்		733,311.40	
	029	000	00	அறிக்கையிடுவோரின் வெளிநாட்டுச் சுற்றுலா		83,500.00	
6,215,000.00	033	000	00	விளையாட்டு வீரர்களின் போசணைக் கொடுப்பனவு		20,100,000.00	
15,000.00	037	000	00	விளையாட்டு வீரர்கள் தொடர்பாக மருத்துவ உதவிகள்		1,050,000.00	
95,785,850.01	038	000	00	விளையாட்டு வீரர்கள் தொடர்பாக உபகாரமளிப்பு		24,215,500.00	
750,000.00	040	035	00	இலங்கை பாடசாலைகள் றக்பி உதைப்பந்தாட்ட சங்கம்			
150,000.00	040	035	00	அகில இலங்கை கராத்தே சங்கம்			
	040	035	00	விளையாட்டுக் கழகங்கள்		381,500.00	
	040	035	00	மாத்தறை மாவட்ட மெய்வல்லுநர் விளையாட்டுச் சங்கம்		200,000.00	
	040	035	00	இலங்கை ஜிம்நாஸ்டிக் சங்கம்		504,000.00	
7,294,500.00	046	005	00	தேசிய விளையாட்டுப் பெருவிழாவிற்குக் கொடுப்பனவு		8,796,050.00	
6,249,365.18	047	000	00	பல்வேறுபட்ட செலவினங்கள்		8,122,633.00	
700,000.00	063	001	00	சனாதிபதி விருதுகள்			
	060	001	00	பல்வகைப்பட்ட வைப்புக்கள்		2,158,884.00	
	065	002	00	எரிபொருள் முற்பணம்		15,000.00	
	065	003	00	நட்டங்கள் சேதங்கள் முற்பணம்		39,666.00	
	065	004	00	பல்வகைப்பட்ட முற்பணம்		226,826.10	
	065	001	00	தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டுப் பல்கட்டடத் தொகுதி - செலவினம்		3,484,761.09	
118,920,341.22				**மொத்தம்**			71,401,808.59
11,860,219.49				டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலுவை		-	7,003,260.02

தேசிய விளையாட்டு நிதியம்

2017-12-31 ஆம் திகதி நிறைவுற்ற வருடம் தொடர்பாக நிலுவை வெளிப்பாடுகள்

கோட் இல. 1	கோட் இல. 2	கோட் இல. 3	கணக்கின் பெயர் மற்றும் விபரம்	கணக்குக் குறிப்பு	பற்று ரூ. சதம்	வரவு ரூ. சதம்
002	000	00	திரண்ட நிதியம் 2017.01.01 ஆம் திகதிக்கு			165,778,042.90
011	000	00	முதலீட்டுக் கணக்கு 2017.12.31 ஆம் திகதிக்கு		142,760,514.45	
013	000	00	கிடைக்கப்பெற வேண்டிய நிலையான வைப்புக்களுக்கான வட்டி 2017.12.31 ஆம் திகதிக்கு	05	6,500,371.24	
013	000	00	கிடைக்கப்பெற வேண்டிய நிலையான வைப்புக்களுக்கான வட்டி 2016.12.31 ஆம் திகதிக்கு		9,698.37	
017	000	00	கிடைக்கப்பெற வேண்டிய வருமானங்கள் - தேசிய லொத்தர் சபை	06	8,054,718.97	
020	000	00	நிலையான வைப்புக்கள் முதலீட்டு வட்டி	04		14,792,802.70
021	000	00	சர்வதேச போட்டிகள்		32,500.00	
026	000	00	நிர்வாகச் செலவினங்கள்		657,677.00	
027	002	00	வேறு கொடுப்பனவுகள்		600,000.00	
033	000	00	விளையாட்டு வீரர்களின் போசணைக் கொடுப்பனவுகள்		20,400,000.00	
037	000	00	விளையாட்டு வீரர்கள் தொடர்பாக மருத்துவ உதவிகள்		1,050,000.00	
038	000	00	விளையாட்டு வீரர்கள் தொடர்பாக உபகாரமளிப்பு		24,185,500.00	
028	000	00	விளையாட்டுப் பொருட்கள் மற்றும் ஏனைய வழங்கல்கள்		733,311.40	
029	000	00	அறிக்கையிடுவோர்களின் வெளிநாட்டுச் சுற்றுலா		83,500.00	
040	035	00	விளையாட்டுக் கழகங்கள்		381,500.00	
040	035	00	இலங்கை ஒலிம்பிக் சங்கம்			

கோட் இல. 1	கோட் இல. 2	கோட் இல. 3	கணக்கின் பெயர் மற்றும் விபரம்	கணக்குக் குறிப்பு	பற்று ரூ. சதம்	வரவு ரூ. சதம்
040	035	00	இலங்கை ஜிம்நாஸ்டிக் சங்கம்		504,000.00	
040	035	00	மாத்தறை மாவட்ட மெய்வல்லுநர் விளையாட்டுச் சங்கம்		200,000.00	
041	000	00	வருமானம் - தேசிய லொத்தர் சபை	06		24,551,128.97
043	000	00	கணக்காய்வுக் கட்டணக் கொடுப்பனவு		180,000.00	
043	001	00	கணக்காய்வுக் கட்டண ஒதுக்கீடு	07		540,000.00
046	005	00	தேசிய விளையாட்டுப் பெருவிழாவிற்குக் கொடுப்பனவு		8,796,050.00	
047	000	00	பல்வேறுபட்ட கொடுப்பனவுகள்		8,122,633.00	
050	000	00	நிதி நிலுவை		7,003,260.02	
060	000	00	பல்வேறுபட்ட வைப்புக்கள்	08		3,327,564.00
066	000	00	கொடுப்பனவுகள் மீளக் கிடைக்கப்பெறல்	01		185,186.50
001	000	00	நன்கொடைகள்			19,500,000.00
038	000	00	போசணைக் கொடுப்பனவு - கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய			300,000.00
066	000	00	வேறு வருமானங்கள்			1.00
064	000	00	செலவினத் தலைப்புக்களுக்கான வரவு			
011	001	00	முதலீட்டு வருமான இணக்கக் கணக்கு			4,278.35
065	002	00	எரிபொருள் முற்பணம்		6,000.00	
065	004	00	பல்வகைப்பட்ட முற்பணம்		214,809.10	
065	001	00	தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டுப் பல்கட்டடத் தொகுதி - செலவினம்		3,868,907.72	
065	000	00	தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கு - கிடைப்பனவு			5,158,385.22
065	002	00	தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டுப் பல்கட்டடத் தொகுதி - கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய செலவினம்			390,061.63
065	000	00	தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கு - கிடைக்கப்பெற வேண்டிய வருமானம்		182,500.00	
					234,527,451.27	234,527,451.27

தேசிய விளையாட்டு நிதியம்

2017-12-31 ஆம் திகதி நிறைவுற்ற வருடம் தொடர்பாக வருமானம் மற்றும் செலவினக் கணக்கு

வருமானம் 2016 மீளளிக்கப்பட்ட ரூ. சதம்	குறிப்பு	கோட் இல. 1	கோட் இல. 2	கோட் இல. 3	கணக்கின் பெயர் மற்றும் விபரங்கள்	கணக்குக் குறிப்பு	கிடைப்பனவு 2017 ரூ. சதம்	கிடைப்பனவு 2017 ரூ. சதம்
					வருமானம்			
10,834,650.14	**09**	**020**	**000**	**00**	முதலீடு மீதான வட்டி	**04**	**14,792,802.70**	
37,404,670.00		**041**	**000**	**00**	வருமானம் - தேசிய லொத்தர் சபை	**06**	**24,551,128.97**	
364,600.00		**066**	**000**	**00**	கொடுப்பனவு மீளக் கிடைக்கப் பெறல்	**01**	**185,186.50**	
10,000,000.00		**001**	**000**	**00**	நன்கொடைகள்		**19,500,000.00**	
		060	**000**	**00**	பல்வேறுபட்ட வைப்புக்கள்			
3,506.84		**066**	**000**	**00**	வேறு வருமானங்கள்		**1.00**	
		065	**000**	**00**	தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டுப் பல்கட்டடத் தொகுதி		**5,158,385.22**	
		020	**000**	**00**	முதலீட்டு வருமான இணக்கம்		**4,278.35**	
58,607,426.98					**மொத்த வருமானம்**			**64,191,782.74**
					செலவினங்கள்			
		023	**000**	**00**	தேசிய போட்டிகள் தொடர்பாக நிதி			
360,000.00		**026**	**000**	**00**	நிர்வாகச் செலவினங்கள்		**657,677.00**	
370,700.00		**028**	**000**	**00**	விளையாட்டுப் பொருட்கள் மற்றும் ஏனைய வழங்கல்கள்		**733,311.40**	
		029	**000**	**00**	அறிக்கையிடுவோர்களின் வெளிநாட்டுச் சுற்றுலா		**83,500.00**	
6,215,000.00		**033**	**000**	**00**	விளையாட்டு வீரர்களின் போசணைக் கொடுப்பனவு		**20,400,000.00**	
		040	**035**	**00**	விளையாட்டுக் கழகங்கள்		**381,500.00**	
		040	**035**	**00**	மாத்தறை மாவட்ட மெய்வல்லுநர் விளையாட்டுச் சங்கம்		**200,000.00**	

வருமானம் 2016 மீளளிக்கப்பட்ட ரூ. சதம்	குறிப்பு	கோட் இல. 1	கோட் இல. 2	கோட் இல. 3	கணக்கின் பெயர் மற்றும் விபரங்கள்	கணக்குக் குறிப்பு	கிடைப்பனவு 2017 ரூ. சதம்	கிடைப்பனவு 2017 ரூ. சதம்
		040	035	00	இலங்கை ஜிம்நாஸ்டிக் சங்கம்		504,000.00	
750,000.00		040	035	00	இலங்கை பாடசாலைகள் றக்பி உதைப்பந்தாட்ட சங்கம்			
150,000.00		040	035	00	அகில இலங்கை கராத்தே சங்கம்			
15,000.00		037	000	00	விளையாட்டு வீரர்கள் தொடர்பாக மருத்துவ உதவிகள்		1,050,000.00	
95,815,850.01		038	000	00	விளையாட்டு வீரர்கள் தொடர்பாக உபகாரமளிப்பு		24,185,500.00	
429,926.03		021	000	00	சர்வதேசப் போட்டிகள்		32,500.00	
360,000.00		043	000	00	கணக்காய்வுக் கட்டணக் கொடுப்பனவு		180,000.00	
7,294,500.00		046	004	00	தேசிய விளையாட்டுப் பெருவிழாவிற்குக் கொடுப்பனவு		8,796,050.00	
6,249,365.18		047	000	00	பல்வேறுபட்ட கொடுப்பனவுகள்		8,122,633.00	
600,000.00		027	002	00	வேறு கொடுப்பனவுகள்		600,000.00	
700,000.00		063	001	00	சனாதிபதி விருதுகள்			
		065	002	00	எரிபொருள் முற்பணம்		6,000.00	
		065	004	00	பல்வகைப்பட்ட முற்பணம்		214,809.10	
		065	001	00	தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டுப் பல்கட்டடத் தொகுதி		3,868,907.72	
119,310,341.22					மொத்தச் செலவினம்			70,016,388.22
(60,702,914.24)					மிகை			(5,824,605.48)

தேசிய விளையாட்டு நிதியம்

2017.12.31 ஆம் திகதிக்கு ஐந்தொகை

கோட் இல. 1	கோட் இல. 2	கோட் இல. 3	குறிப்பு	கணக்கின் பெயர் மற்றும் விபரங்கள்	கணக்குக் குறிப்பு	2016 மீளளிக்கப்பட்ட ரூ. சதம்	2017 ரூ. சதம்
				சொத்துக்கள்	-		
050	**000**	**00**		நிதி நிலுவை		**11,860,219.49**	**7,003,260.02**
			09	கிடைக்கப்பெற வேண்டிய விசேட முற்பணம்			-
				பல்வகைக் கடன்படுனர்	**03**	**16,225,181.22**	**14,747,288.58**
						28,085,400.71	**21,750,548.60**
				நடைமுறையல்லாச் சொத்துக்கள்	-		
			09	முதலீட்டுக் கணக்கு		**138,157,642.19**	**142,760,514.45**
				மொத்தச் சொத்துக்கள்		**166,243,042.90**	**164,511,063.05**
				பொறுப்புக்கள்	-		
				நடைமுறைப் பொறுப்புக்கள்	-		
060	**000**	**00**		பல்வகை வைப்புக்கள்	**08**	**75,000.00**	**3,327,564.00**
018	**000**	**00**		திரண்ட செலவினங்கள்	**07**	**390,000.00**	**1,230,061.63**
				ஒதுக்கீடுகள்		**465,000.00**	**4,557,625.63**
				நடைமுறையல்லா பெறுப்புக்கள்	-		
				மொத்தப் பொறுப்புக்கள்		**465,000.00**	**4,557,625.63**
				தேறிய சொத்துக்கள்		**165,778,042.90**	**159,953,437.42**
				தேறிய சொத்துக்கள் / பங்குகள்			
002	**000**	**00**	**09**	திரண்ட நிதி	**11**	**165,778,042.90**	**159,953,437.42**
				மொத்த தேறிய சொத்துக்கள் / பங்குகள்		**165,778,042.90**	**159,953,437.42**

தேசிய விளையாட்டு நிதியம்

2017.12.31 ஆம் திகதிக்கு நிறைவடைந்த வருடம் தொடர்பாக நிதிப்பாய்ச்சல் கூற்று

விபரம்	நிதி	நிதி
	ரூ. சதம்	ரூ. சதம்
அழுல்படுத்தற் செயற்பாடுகளிலிருந்தான நிதிப் பாய்ச்சல்கள்		
வருடத்திற்கான மிகை	(5,824,605.48)	(5,824,605.48)
நிதியல்லாத மாற்றங்கள்		
கடன்படுநர் குறைவடைதல்	1,477,892.64	
பல்வகைப்பட்ட வைப்புக்கள் அதிகரித்தல்	3,252,564.00	
பல்வகைப்பட்ட கடன்படுநர் அதிகரித்தல்	840,061.63	
அழுல்படுத்தற் செயற்பாடுகளிலிருந்தான தேறிய நிதிப் பாய்ச்சல்		
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான நிதிப் பாய்ச்சல்		
நிலையான வைப்புக்கள் அதிகரித்தல்	4,602,872.26	
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய நிதிப் பாய்ச்சல்		
நிதி அல்லது நிதிக்குச் சமமானமானவற்றின் தேறிய அதிகரிப்பு		(4,856,959.47)
காலப்பகுதியின் ஆரம்பத்திலிருந்தான நிதி அல்லது நிதிக்குச் சமமானமானவைகள்		11,860,219.49
காலப்பகுதியின் நிறைவுற்றபோதான நிதி அல்லது நிதிக்குச் சமமானமானவைகள்		7,003,260.02

தேசிய விளையாட்டு நிதியம்

2017.12.31 ஆம் திகதிக்கு நிறைவடைந்த வருடம் தொடர்பாக உரிமையாண்மை மாற்றக் கூற்று

2016 மீளளிக்கப்பட்ட ரூ. சதம்	குறிப்பு	கணக்கின் பெயர் மற்றும் விபரங்கள்	2017 ரூ. சதம்
226,480,957.14	09	2017.01.01 ஆம் திகதிக்கு திரண்ட நிதியம்	165,778,042.90
(60,702,914.24)		2017 ஆம் வருடத்தில் பற்றாக்குறை	(5,824,605.48)
165,778,042.90		**2017.12.31** ஆம் திகதிக்கு திரண்ட நிதியம்	**159,953,437.42**



ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE



எனது இலக்கம் - CA S/A/NSF/6/7/11 2018.12

செயலாளர்,
விளையாட்டு அமைச்சு

தேசிய விளையாட்டு நிதியத்தின் 2017 டிசம்பர் 31 ஆம் தினத்திற்கு நிறைவடையும் வருடத்தின் பொருட்டு நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவு மற்றும் 1973 இலக்கம் 25 கொண்ட விளையாட்டுக்கள் சட்டத்தின் 25(4) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை.

தேசிய விளையாட்டு நிதியத்தின் 2017 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்தில் முடிவடையும் வருடம் தொடர்பாகவான வரவு மற்றும் செலவுக் கணக்கு, உரிமையாண்மை மாற்றமடைதலின் கூற்று மற்றும் நிதிப்பாய்ச்சற் கூற்றுக்கள் மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தற் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 டிசம்பர் 31 ஆம் தினத்திற்கு நிறைவடையும் வருடம் தொடர்பாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு, சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த அறிக்கையுடன் வெளியிடப்படுதல் வேண்டுமென நான் கருதும் எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புக்கள் இவ் அறிக்கையில் காட்டப்படுள்ளன.

1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கையின் பொதுக் கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு ஏற்ப தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய அளவுரீதியிலான போலியான கூற்றுக்கள் அற்றதான நிதிகூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு இயலுமாவதன் பொருட்டு அவசியமாக அமையும் உள்ளகக் கட்டுப்பாட்டுக்களைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயங்களை வெளியிடுதல் எனது பொறுப்பாகும். என்னால் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களது சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப (ISSAI 1000 – 1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்புடையதாக எனது கணக்காய்வானது மேற்கொள்ளப்பட்டது. ஒழுக்க விழுமியங்களது அவசியத் தன்மைக்கு ஏற்புடைத்தாகுமாறும் மற்றும் நிதிக்கூற்றுக்கள் அளவுரீதியிலான போலியான கூற்றுக்கள் அல்லாதவையாவென்பது பற்றி நியாயமான உறுதிப்பாடொன்றினைப் பெற்றுக்கொள்ளுதலின் பொருட்டு கணக்காய்வானது திட்டமிடப்பட்டு அமுல்படுத்துவதென இந் நியமங்கள் எதிர்பார்க்கின்றது.

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பெறுமதிகள் மற்றும் வெளிப்படுத்தல்களுக்கு ஏற்புடைத்தான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளுதலின் பொருட்டு செயலொழுங்குகளை செயற்படுத்துதல் கணக்காய்வுக்குள் உள்ளடங்குகின்றன. தெரிவுசெய்துகொள்ளப்பட்ட செயலொங்குகள், மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக் கூடிய அளவுரீதியான போலியான கூற்றுக்களின் அபாயங்களை மதிப்பீடு செய்வதனையும் உள்ளடக்கிய கணக்காய்வின் மத்தியத்துவத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது. அவ் அபாயங்கள் மதிப்பீடு செய்யப்படும் போது, சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான உகந்த செயலொழுங்குகளைத் திட்டமிடலின் பொருட்டு நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காகவும் மற்றும் நியாயமாக சமர்ப்பிப்பதற்காகவும் ஏற்புடைத்தான உள்ளகக் கட்டுப்பாடு கணக்காய்வின் கவனத்திற் கொள்ளப்பட்டதாயினும் நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயன்பாடுகள் தொடர்பான அபிப்பிராயமொன்றினை வெளியிடுவதற்கு எண்ணவில்லை. முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு மற்றும் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினை மதிப்பிடுவதனைப் போன்று நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பிப்புக்கள் தொடர்பான மதிப்பீடு செய்யப்படுதலும் கணக்காய்வுக்குள் உள்ளடங்கும். கணக்காய்வின் விடயப்பரப்பினையும் மற்றும் அளவினைத் தீர்மானிப்பதற்கு 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகளின் அடிப்படையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரம் வழங்கப்படுகின்றது.

எனது கணக்காய்வு அபிப்பிராயம் தொடர்பாக அடிப்படையொன்றினை வழங்குவதன் பொருட்டு என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சாட்சிகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 அபிப்பிராயம்

நிதிக் கூற்றுக்களில் 2017 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு தேசிய விளையாட்டு நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத் தினத்திற்கு நிறைவடையும் வருடம் தொடர்பாக அதன் நிதி செயற்படுதன்மை மற்றும் நிதிப்பாய்ச்சல் இலங்கையின் பொதுக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப உண்மையான மற்றும் நியாயமான நிலைமையொன்றினை ஏற்படுத்தும் என்பது நான் கொள்ளும் அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கருத்துரைகள்

.....

2.2.1 தெளிவுப்படுத்தப்படாத வித்தியாசங்கள்

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வு வருடத்தில் தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டுப் பல்கட்டடத் தொகுதியின் வருமானம ரூ. 5,158,385 ஆவதுடன் விளையாட்டுப் பல்கட்டடத் தொகுதியின் செயற்றிட்ட முகாமையாளரால் அமைச்சிற்கு அனுப்பப்பட்ட வருமானத்தினை வரவு வைக்கும் விபரங்கள் அடங்கிய மாதாந்த அறிக்கைகளின் பிரகாரம் மொத்த வருமானம் ரூ. 5,083,640 என்பதனால் ரூ. 74,745 வித்தியாசம் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.2.3 சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணக்கமுடையதாகக் காணப்படாமை

1973 இலக்கம் 25 கொண்ட தேசிய விளையாட்டுச் சட்டம் 25(2) பிரிவின் பிரகாரம் அமைச்சின் செயலாளரினால் ஒவ்வோர் நாட்காட்டி வருடம் முடிவடைந்த பின்னர் இயன்றவிரைவில் நிதியத்தின் நிர்வாகம் தொடர்பாக அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வேண்டியிருப்பினும் மீளாய்வு வருடம் தொடர்பாக அவ்வாறானதோர் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுக் காணப்படவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களுக்கு அமைய 2017 டிசம்பர் 31 ஆம் தினத்திற்கு நிறைவடையும் வருடம் தொடர்பாக நிதியத்தின் நிதிப்பெறுபேறு ரூ. 5,824,605 பற்றாக்குறையாகக் காணப்பட்டதுடன் அதற்கு மாறாக கடந்த வருடத்தில் பற்றாக்குறை ரூ. 60,702,914 ஆக இருந்ததனால் கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது மீளாய்வு வருடத்தில் நிதிப்பெறுபேற்றில் ரூ. 54,878,309 பற்றாக்குறையின் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. விளையாட்டு வீரர்கள் தொடர்பாக உபகாரமளிப்பு வைபவத்தின் செலவு ரூ. 71,630,350 இனால் குறைவடைந்தமை, முதலீட்டின் மீதான வட்டி ரூ. 3,958,153 இனால் அதிகரித்தமை, தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டுப் பல்கட்டடத் தொகுதியினால் மீளாய்வு வருடத்தில் ரூ. 1,289,478 தேறிய வருமானம் கிடைக்கப்பெறல் மற்றும் நன்கொடைகள் ரூ. 9,500,000 இனால் அதிகரித்தமை என்பன மேலே பற்றாக்குறை வீழ்ச்சி மீது பிரதானமாக தாக்கஞ் செலுத்தியிருந்தன.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயற்சாதனைகள்

இலங்கையில் விளையாட்டுக்களுக்கு ஊக்கமளித்தல், அவற்றினை முன்னேற்றுதல் மற்றும் அவற்றினை அபிவிருத்தி செய்தல் என்பன நிதியத்தின் பிரதான நோக்கங்களாகக் காணப்பட்டதுடன் தேசிய அரசபேரவையின் 1973 இலக்கம் 25 கொண்ட விளையாட்டு சட்டத்தின் 22 ஆம் பிரிவில் அது தொடர்பாக விளையாட்டு நிதியத்திற்கு சட்டரீதியிலான ஏற்பாடு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. 2007 ஆம் வருடத்திலிருந்து விளையாட்டு அமைச்சின் செயலாளரது பூரணமான மேற்பார்வையின் கீழ் தேசிய விளையாட்டு நிதியம் செயற்பட்டது. எனினும் 1973 இலக்கம் 25 கொண்ட விளையாட்டுச் சட்டத்தின் 25(1) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நிர்வாகம் தொடர்பாக அமைச்சின் செயலாளரால் மீளாய்வு வருடத்திற்கு ஏற்புடையதாக நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பாக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கப்படவில்லை.

4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கள்கள்

2005/2006 சாப் விளையாட்டு விழாவின் நீச்சல் குழாமில் பயிற்றுவித்தல் தொடர்பாக எனக் காரணங்கள் காட்டப்பட்டு தனியார் நீச்சல் பயிற்றுவிப்பாளரிடம் தேசிய விளையாட்டு நிதியத்திலிருந்து மீளாய்வு வருடத்தில் ரூபா 4 மில்லியன் கொடுப்பனவு

செய்யப்பட்டிருந்தாலும் அக் கொடுப்பனவின் சட்டரீதித் தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு அமைச்சு மற்றும் பயிற்றுவிப்பாளரிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தம், ஏற்புடைய செலவு அறிக்கை, சிட்டைப் பட்டியல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கப்படவில்லை. மீளாய்வு வருடத்தில் ரூபா 4 மில்லியன் உள்ளடங்களாக ரூபா 5.3 மில்லியன் மொத்தச் செலவினத்தில் ரூபா 1.3 மில்லியன் 2012 ஆம் வருடத்தில் இவ் விதமாக அப் பயிற்றுவிப்பாளருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததாக மேலும் அவதானிக்கப்பட்டிருந்தது.

5. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

5.1 உள்ளகக் கணக்காய்வு

தேசிய விளையாட்டு நிதியம் தொடர்பாக மீளாய்வு வருடத்தினுள் வருமானம் ரூ. 64 மில்லியன் ஆகவும் நிதியத்தின் செலவினம் ரூ. 70 மில்லியன் ஆகவும் காணப்பட்டதுடன் நிதியத்திடம் மீளாய்வு வருடம் முடிவடையும் தினத்திற்கு இருந்த சொத்துக்களின் கூட்டுத்தொகை ரூ. 164 மில்லியன்களாகும். அதன் அடிப்படையில் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வொன்று செயற்பட்டிருக்க வேண்டுமெனினும் நிதியம் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டிருக்கப்படவில்லை. விளையாட்டு அமைச்சின் கீழ் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டிருக்கப்படினும் தேசிய விளையாட்டு நிதியத்தின் கணக்காய்வு நடவடிக்கைகள், அவ் உள்ளகக் கணக்காய்வு அலகின் வாயிலாக மேற்கொள்ளப்படுவதற்குக் கவனஞ் செலுத்தப்பட்டிருக்கப்படவில்லை.

5.2 பாதீடு ஆவணமயக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட எண்ணிக்கை மற்றும் உண்மையான எண்ணிக்கை என்பனவற்றை ஒப்பிடும்போது 11 விடயங்களுக்கு ஏற்புடையதாக 14 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையில் வேறுபாடுகள் அவதானிக்கபட்டமையினால் பாதீடு விளைதிறன் மிக்க முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் காரணி ஒன்றாக ஈடுபடுத்தப்பட்டு இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

06. முறைமைகளும் நிர்வாகமும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் நிர்வாகக் குறைபாடுகள் அமைச்சின் செயலாளரது கவனத்திற்கு இடையிடையே கொண்டுவரப்பட்டது. கீழ்வரும் நிர்வாகத்துறைகள் தொடர்பாக விசேட கவனஞ் செலுத்தப்படுதல் வேண்டும்.

முறைமைகள் மற்றும் நிர்வாகத்துறைகள்	அவதானிப்பு
(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு	பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினம் என்பவற்றிற்கிடையே வேறுபாடுகள் காணப்படுதல்.
(ஆ) உள்ளகக் கணக்காய்வு	உள்ளகக் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டிராமை.

எச்.எம்.காமினி விஜேசிங்க

கணக்காய்வாளர் தலைமை அதிபதி